விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 21 புதன்கிழமை (06.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 252

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD. RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# யாழில் பட்டினிச் சாவு அபாயம்

# தலைவர் பிரபாவுக்கு கடிதம்





## யாழ்.ஆயர் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மக்களை பட்டினிச்சாவில் இருந்து காப்பாற்றுவதற்கு ஒரிரு கப்பல் சேவைகளையாவது தடையின்றி மேற்கொள்ள அனுமதிக்குமாறு யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரனுக்கு அவசர கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார். அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடாக இக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஆசிரியர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பில் தமிழ் ஆசிரியர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சுட்டுக்கொல்லப்பட்டவர் கிருஷ்ணபிள்ளை சிவநாதன் (வயது 35) எனஅடையாளம்காணப்பட்டுள்ளார்.

ழாவடிவேம்பில் தனது வீட்டில் இருந்த சமயம் நேற்று முன்தினமிரவு 6.45 மணியளவில் இவர் சுடப்பட்டதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.தளவாய்ப் பாடசாலையில் இவர் தமிழ் ஆசிரியராக பணியாற்றுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச)

## மூதூரில் ஆட்லறித் தாக்குதல் சிப்பாய் பலி; 20பேர் படுகாயம்

(திருகோணமலை)

மூதூர் செல்வநகர் தோப்பூர் பகுதிகளில் உள்ள இராணுவத்தினரின் முகாம் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட ஆட்லறித்தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார்.

மேலும் 20 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். நேற்றுக் காலை 7.15 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பூர்ப் பகுதியில் இருந்தே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் தாக்குதலில் படுகாயமடைந்தவர்கள் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## அச்செழுவில் கிளைமோர் சிப்பாய் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

அச்செழுவில் நேற்று மாலை 5 மணியளவில் இராணுவத்தின் பஸ் ஒன்றை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் மேலும் 10 பேர் படுகாயமடைந்தனர்.

பஸ் பலத்த சேதத்திற்கு உள்ளானது. இச் சம்பவத்தில் காயமடைந்த இராணுவத்தினர் அனைவரும் உடனடியாக பலாலி மருத்துவமனைக்குக் (04 ஆம் பக்கம் பார்க்க)

## தையல்கடை உரிமையாளர் ஆவரங்காலில் சுட்டுக்கொலை

ஆவரங்காலில் நேற்று முன்தினம் மாலை 5.45 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் தையல் கடை நடத்திவரும் கிருஷ்ணன் யோகநாதன் (வயது 51) என தெரிவிக்கப்பட்டது.

ஊரடங்குச்சட்டம் 6 மணிக்கு அமுல் படுத்தப்பட்ட நிலையில் அவரின் சடலத்திற்கு அருகில் உறவினர்கள் விடிய விடிய இருந்தனர்.

பிராணிகளின் தீண்டுதலில் இருந்து பாதுகாப்பதற்காக வெள்ளைக்கொடிகளை பறக்கவிட்டவாறு அவர்கள் விழித்திருந்தனர்.

நேற்றுக் காலை சம்பவ இடத்திற்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி ச.இளங்கோவன் விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலத்தை பிரேதபரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.(ச-5)

## சமாதானப் பேச்சுக்குத் தயார் என தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவிப்பு

### அரசாங்கப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல

(யாழ்ப்பாணம்)

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு தயாராக இருப்பதாக விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் கூறியுள்ளதாக அரசாங்கப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சம்பூரை நோக்கி படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமானால் தாம் சமாதானப் பேச்சுவார்த்தையில் இருந்து விலகிக்கொள்ளப்போவதாக விடுதலைப்புலிகள் அறிவித்திருந்தனர்.

எனினும் தற்போது சம்பூரை இராணுவத்தினர் கைப்பற்றிய (04 ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வுக்கழகத்தின் வங்கிக்கணக்கு மேலும் ஆறு மாத காலத்திற்கு முடக்கம்

### மேல் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வங்கிக் கணக்குகளை மேலும் ஆறு மாத காலத்திற்கு முடக்கி வைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மத்திய வங்கியின் புலனாய்வுப்பிரிவு சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் மேல் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தது.

இது தொடர்பாக விசாரணை செய்த மேல் நீதிமன்றம் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வங்கிக் கணக்குகளை மேலும் ஆறுமாத காலத்திற்கு முடக்கி வைக்க உத்தரவிட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்பு பட்டதாகத் தெரிவித்து இலங்கை மத்திய வங்கி ஏழு நாட்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் கணக்குகளை முடக்கிவைக்குமாறு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நோர்வேயின் உறவை மட்டுப்படுத்த அரசிடம் ஜே.வி.பி.வேண்டுகோள்!

(கொழும்பு)

இலங்கை அரசுக்கு எதிராக செயற்படும் பிரிவினைவாதிகளுடன் நட்பு பாராட்டும் நோர்வே அரசாங்கத்துடனான உறவை தூதரக தொடர்புகளுக்கு மட்டுப்படுத்த வேண்டும் என ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கோரியுள்ளார்.

நேற்று நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். 1987 ஆம் ஆண்டு சட்ட விரோதமாக இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு இரண்டாக பிரிக்கப் படவேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அரை அரசு என்ற ராஜதந்திர அந்தஸ்தை பெற்றுக் கொடுத்த தேசத்துரோக போர் நிறுத்த உடன்படிக்கையில் இருந்து அரசாங்கம் உத்தியோகபூர்வமாக விலகவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

சம்பூரில் மாத்திரமல்லாது வட-கிழக்கில் உள்ள அனைத்து இடங்களிலும் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளை அகற்ற வேண்டும். (04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய
# தேர்த்திருவிழா சிறப்பு மலர் – 06.09.2006

## மஹோற்சவ பிரதம குருவின் அருளாசிச் செய்தி

சிவநேய செல்வர்காள்!

இலங்காதீபத்தின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தின் தெற்கே மண்டைதீவு என்னும் தீவில் திருவெண்காடு என்னும் புண்ணிய ஷேத்திரத்தில் வீற்றிருந்து, அடியார்களுக்கு வேண்டுவன ஈந்தருளும் சித்திவிநாயகப் பெருமானுக்கு இவ்வூர் மக்களினதும் ஆலய தர்ம பரிபாலகர்களினதும் பேரவாவினால் தேர்த் திருப்பணி ஆரம்பித்து பலவித இடர்கள், இன்னல்களுக்கு மத்தியிலும் அத்திருப்பணி தொடர்ந்து எம்பெருமான் திருவருளினால் இன்று இரதாரோகணம் மிகவும் சிறப்பாக இடம் பெறுவதையிட்டு நாம் பெருமகிழ்வடைகின்றோம்.

இம்மங்கள வைபவம் இனிதே நடைபெற எம்பெருமான்திருப்பாதங்களை பக்தி சிரத்தையுடன் வணங்கி பக்த கோடிகளுக்கு சகல செல்வங்களையும் நமது திருவெண்காட்டு சித்திவிநாயகப் பெருமான் அருள்வாராக என ஆசி கூறி அமைகிறேன்.

'லோகா சமஸ்தா சுகினோ பவந்து'

சிவாகம கிரியாதத்வநிதி
சிவஸ்ரீ. இராம.பாலச்சந்திர குருக்கள்
(இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய ஆதீன குரு)



## ஆலய வரலாறு

மண்டைதீவின் மையப்பகுதியில் அமைந்துள்ள திருவெண்காடு எனும் குறிச்சி அக்காலத்தில் பற்றைகளும் திருக்கொன்றை, வேம்பு முதலிய மரங்களும் அடர்ந்த காட்டுப் பகுதிகளாகத் திகழ்ந்தது.

இக் காட்டில் ஓர் பெரிய ஆல விருட்சமும் காணப்பட்டது. இக் கிராமத்தின் வடபகுதியில் வசித்த மக்கள் தென்பகுதிக்கு இக் காட்டின் ஊடாகவே சென்று வந்தார்கள். ஒரு நாள் மாலை நேரம் ஐயம்பிள்ளை உடையார் இப் பாதை வழியாகச் சென்று கொண்டிருக்கையில் தன்னைப் பின்பக்கமாக ஏதோ ஒன்று பிடித்து இழுப்பது போன்ற பிரமை அவருக்கு ஏற்பட்டது.

அவர் திணுக்குற்றுத் திரும்பிப் பார்த்த போது ஆல விருட்சத்தின் கீழ் பெரிய வெள்ளை யானை ஒன்று தன் துதிக்கையை அவரை நோக்கி நீட்டிய வண்ணம் நின்றது. இதைக் கண்ணுற்ற ஐயம்பிள்ளை உடையார் ஆச்சரியப்பட்டார். இதன்போது யானை ஆல மரத்தின் மறு பக்கம் சென்று மறைந்து விட்டது.

இச் சம்பவம் அவருக்கு ஓர் அதிசயமாகவும் மிகுந்த பயமாகவும் இருந்தது. எனினும் அவர் அவ் யானையைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலுடன் அச்சுற்றாடலில் தேடினார். ஆனால் அவரால் யானையை மீண்டும் காண முடியவில்லை.

அவர் இச்சம்பவத்தை தமது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்து அவர்களுடன் கலந்து ஆலோசித்தார். அவர்கள் எல்லோரும் பிள்ளையார் தான் இவ்வாறு காட்சியளித்தார் என்ற கருத்தைக் கூறினார்கள்.

இதன் காரணமாகவே அவர் ஆல விருட்சத்தின் அருகில் பிள்ளையார் ஆலயத்தை அமைத்தார். அதுவே திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயமாகச் சிறப்புற்று விளங்குகிறது.

18 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பெற்ற வரலாற்றுப் பெருமை மிக்க இவ்வாலயத்தில் இன்று சித்திரத் தேரில் விநாயகர் வீதி உலா வரும் அற்புதம் நாம் செய்த தவப்பேறேயாகும்.

பொ.வி.திருநாவுக்கரசு
(ஆலய தர்மகர்த்தா)

வர்ணரதம் வருகுதையா திருவெண்காடர் வீதியிலே.
பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்
104, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.222 2386

வேதவொலிமிதந்திடவே தூயரதம் வீதி வருகிறது.
ரூபன் புத்தகசாலை
605, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

வீதி பஜனையிலே தாள ஒலி மிதந்து வருகிறது.
இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
E.S.PERAMPALAM & CO
இல.50,52,54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2988
021 222 3096
Fax:-021 222 2368

திருவெண்காடர் தேர் வடம் பிடித்தே இடம்பிடிப்போம்.
ஈஸ்வரபகவான் & கொம்பனி
இல.91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:-021 222 2350

## நேற்றுக் காலை முதல் பல்குழல் தாக்குதல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரப்பகுதியிலிருந்து நேற்றுக் காலை முதல் பல்குழல் மற்றும் ஆட்லறித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தென்மராட்சி முன்னரங்கப் பகுதிகளிலிருந்து கல்முனை, பூநகரி முன்னரங்கப் பகுதிகளை நோக்கி ஆட்லறித் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க யாழ்.பண்ணை, பொம்மைவெளி மற்றும் ஆனைக்கோட்டைப் பகுதிகளிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தாகத் தெரிவிக்கப்பட்டது. (ச)

## திருடப்பட்ட பொருட்கள் பொம்மைவெளியில் மீட்பு

யாழ்.கஸ்தூரியார் வீதியில் இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள வீடியோக் கடை நேற்று முன்தினமிரவு உடைக்கப்பட்டுத் திருடப்பட்டுள்ளது.

அக்கடைக்கு அருகிலிருந்த பலசரக்குக் கடையும் அண்மையில் உடைக்கப்பட்டு அங்கிருந்த பல லட்சம் ரூபா பொருட்கள் திருடப்பட்டன.

இந்நிலையில் இரு கடைகளின் உரிமையாளர்களது தீவிர முயற்சியினால் களவாடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடை உரிமையாளர்களுக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் பொம்மைவெளிப் பகுதியிலிருந்து பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

எனினும் பொருட்கள் மீட்கப்பட்ட வீடுகளில் எவரும் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. மீட்கப்பட்ட பொருட்கள் யாழ். பொலிஸாரினால் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை களவாடப்பட்ட பொருட்கள் வைக்கப்பட்ட இடத்தில் 'அண்ணா பசியின் காரணமாகவே இந்நிலைக்குத் தள்ளப்பட்டோம்' என்ற துண்டுப் பிரசுரம் ஒன்றும் மீட்கப்பட்டது. (ச–5)

## ஏறாவூரில் இளைஞன் அடித்துக் கொலை

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்தி வெளிப்பிரதேசத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை கறுவாக்கேணிப் பகுதியைச் சேர்ந்த கணேஷ் சுரேஸ்(வயது–22) என்பவரே கொலை செய்யப்பட்டவர் ஆவார்.

அக்கரைப்பற்று அரிசி ஆலையில் வேலை செய்து விட்டு வீடு திரும்பியுள்ள இவர் சந்தி வெளியில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்ற வேளை இனந்தெரியாதோரால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். சடலம் ஏறாவூர் வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச–5)

## முகமாலையில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களின் உரிமையாளர்களுக்கு

முகமாலைச் சோதனைச் சாவடியில் வாகனங்களை விட்டுச் சென்றவர்களை இன்று காலை 10 மணிக்கு கொடிகாமம் பொலிஸ் நிலையத்திற்குச் செல்லுமாறு யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி மாலையிலிருந்து ஆரம்பமான மோதல்களினையடுத்து முகமாலை இராணுவச் சோதனைச் சாவடிகளில் பொருட்களுடன் நின்ற லொறிகளை அதன் உரிமையாளர்கள் அங்கேயே விட்டு விட்டுத்தப்பிச் சென்றனர்.

இந்நிலையில் அவற்றின் உரிமையாளர்கள் சம்பந்தப்பட்ட வாகனத்தின் பதிவு ஆவணங்கள் ஏனை தொடர்புடை ஆவணங்களுடன் கொடிகாமம் பொலிஸ் நிலையத்திற்குச் சமுகமளித்து மேலதிக விபரங்களையும் வாகனம் பெற்றுக் கொள்வது சம்பந்தமான நடவடிக்கைகளையும் மேற் கொள்ளுமாறு அரச அதிபர் வேண்டியுள்ளார். (ச)

## இரு இளைஞர்களைக் காணவில்லையென மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

பூநாறி மரத்தடி பால்பண்ணை வீதியைச் சேர்ந்த வண்ணமணி யோகேஸ்வரன்(வயது–26) என்பவரை காணவில்லை என மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாம் திகதி 4.30 மணிக்கு நாச்சிமார் கோவிலடியில் உள்ள சகோதரன் வீட்டிற்கு சென்று வீடுதிரும்பியவரை நேற்று வரை காணவில்லை என அவரதுமனைவியால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை தாவளை இயற்றாழையைச் சேர்ந்த கந்தசாமி சிறிதரன் (வயது–24) என்பவரையும் காணவில்லை என முறையிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் கொழும்பு கிராண்பாஸ் வெளியில் இடம்பெற்ற சுற்றிவளைப்புத் தேடுதலில் கொட்டாஞ்சேனைப் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார் எனவும் பொலிஸ் நிலையம் சென்று கேட்டபோது அவரைத் தாம் கைது செய்யவில்லை எனக் கூறிவதாகவும் குறித்த இளைஞரின் தாயாரால் யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-5)

## 500 ஜெலட்டின்களுடன் ஆறு இளைஞர்கள் கைது

நவகமுவவில் 500 ஜெலட்டின் குச்சிகளுடன் சென்ற லொறியை பொலிஸார் பறிமுதல் செய்தனர். லொறியிலிருந்த 6 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் சிங்களவர், இருவர் தமிழர், இருவர் முஸ்லிம்கள். கொழும்பு–அவிசாவளை வீதி சோதனைச் சாவடியில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளத்திலிருந்து வந்த லொறியின் உள்ளே இந்த ஜெலட்டின்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகவும் மீன்பிடித் தொழிலுக்காக அவை கொண்டு செல்லப்பட்டிருக்க [illegible] பொலிஸார் தெரிவித்தனர். (ச–5)

## தேர்த் திருவிழா

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு திருவெண்காடு திருவருள் மிகு சித்திவிநாயகர் தேர்த் திருவிழா இன்று நடைபெறுகிறது.

இன்று காலை 9.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று 10.30 மணிக்கு சித்திவிநாயகர் தேரில் ஆரோகணிப்பார்.

நாளை காலை 10 மணிக்குத் தீர்தத் திருவிழா நடைபெறும். (ச)

## ஆவணிப் பூரணை விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் ஆவணிப் பூரணை விழா நாளை 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு தாவடி இ.த.க. பாடசாலையின் பழைய கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

பஜனையைத் தொடர்ந்து 'சாதுசங்கத்தினதும் சத் சங்கத்தினதும் மகிமைகள்!' என்ற பொருளில் இராமகிருஷ்ண சேவாச்சிரம செயலாளர் சி.சிவமோகன் வழங்கவுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> பட்டினி கிடப்பவன்-அவன் எவ்வளவு கண்ணியமான அரசியல் கருத்துக்களைக் கொண்டிருந்தாலும்-அபாயகரமான ஆசாமிதான். சாப்பாட்டை முடித்துக் கொண்டு விட்டவன் ஒருநாளும் புரட்சிக்காரனாக மாட்டான்.
>
> -பெர்னாட்ஷா

வலம்புரி

## பொருட் பங்கீட்டில் ஒழுங்கு முறை தேவை

யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் பொருட் தட்டுப்பாட்டிற்கு கொழும்பிலிருந்து உணவுப் பண்டங்கள் எடுத்து வரப்படவில்லை என்பது பிரதான காரணமாகும்.

அதேநேரம் இந்தப் பொருட்களை எதுவித பங்கீட்டு முறையையும் பின்பற்றாமல் வர்த்தகர்கள் மொத்தமாக விற்பனை செய்து விட்டனர்.

இதனால் ஏழைகள் பெரும் பஞ்சத்திற்கு ஆளாகியுள்ளனர். ஒரு காலத்தில் பதுக்கல் என்பது வர்த்தகர்களாலேயே மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் தற்போது வர்த்தகர்கள் பொருட் பதுக்கலைச் செய்யவில்லை. மாறாக நுகர்வோர் பொருட் பதுக்கலில் ஈடுபட்டுள்ளனர்.

அதாவது பண வசதி படைத்த நுகர்வோர் மா, சீனி, அரிசி ஆகிய அத்தியாவசியப் பொருட்களை மூடைக்கணக்கில் கொள்வனவு செய்து வீட்டிற்குள் முடக்கி வைத்துள்ளனர்.

இவ்விதம் உணவுப் பொருட்களை நுகர்வோர் பதுக்கி வைப்பதற்கு வர்த்தகர்களே காரணமாக இருந்துள்ளனர்.

ஐந்து கிலோ, பத்துக் கிலோ என அரிசி மற்றும் கோதுமை மாவை நிறுத்துக் கொடுப்பது தமக்கு இடைஞ்சல் என்பதால் ரொக்கமாக பணத்தைப் பெற்றுக் கொண்டு மூடைக்கணக்கில் பொருட்களை நுகர்வோருக்கு தட்டி விட்டனர்.

இப்போது குறிப்பிட்ட பணக்காரர்களின் வீடுகளில் மூடைக்கணக்கில் அரசி, சீனி என்பன உண்பார் இன்றி கிடக்கின்றது.

வர்த்தகர்கள் பொருட் பதுக்கலில் ஈடுபடும் போது அது கறுப்புச் சந்தையில் விற்பனையாகும். ஆனால் நுகர்வோர் பொருட் பதுக்கலை செய்யும் போது அது சந்தைக்கு வராமல் சக்குப் பிடித்துப் போகும்.

எனவே இனிவரும் காலத்திலாவது பொருட் பங்கீட்டை ஒழுங்கான முறையில் செய்வதற்கு உரியவர்கள் தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

பொருட் தட்டுப்பாடு நிலவுகின்றபோது இதனை ஓரளவேனும் தவிர்ப்பதற்கான ஒரே வழி பொருத்தமான பங்கீட்டு முறையேயாகும்.

இதனை அதிகாரிகள் செய்வதற்கு வர்த்தகர்களும் பொதுமக்களும் பரிபூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இதற்கு மேலாக, உணவுப் பொருட்களை மூடைக்கணக்கில் வாங்கி வீட்டிற்குள் புதைத்து வைத்திருப்பவர்கள் மற்றவர்களும் பசியாற உதவ வேண்டும்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பெருந் தவத்தைச் செய்து பட்டினியிலிருந்து மக்களை பாதுகாப்பது அனைவரதும் கடமையாகும்.

# புனர்வாழ்வுக் கழக வங்கிக் கணக்கு முடக்கம் இலங்கை மத்திய வங்கி விரிவான விளக்கம்

தமிழர் புனர்வாழ்வுக் கழக வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டமை குறித்து மத்திய வங்கி விளக்கம் அளித்துள்ளது. இது தொடர்பாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு;

பயங்கரவாதத்துக்கான நிதியளிப்பைத் தடை செய்யும் சர்வதேச ஒப்பந்தத்தில் 2000 ஜனவரி 10 ஆம் திகதி அரசாங்கம் கைச்சாத்திட்டு அதனை உறுதிப்படுத்தியது. இந்த ஒப்பந்தம் ஐ.நா.பொதுச்சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி உறுதி செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தம் தொடர்பான இலங்கையின் கடப்பாடுகளை நிறைவு செய்வதற்காக 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்புத் தடைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இச் சட்டத்தின் கீழ் பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்காக அத்தகைய நடவடிக்கை பயங்கரவாத நடவடிக்கையாக பயன்படுத்தப்படும் என்பதை அறிந்திருந்த நிலையில் நிதிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் சேகரித்தல் ஒரு குற்றமாகக் கருதப்படும்.

இச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் என்பது பற்றிய விளக்கம் ஐ.நா. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட அதே விளக்கத்தைக் கொண்டிருந்தது.

அண்மைக்காலத்தில் உலகின் பல பாக‍ங்களிலும் பயங்கரவாத நிதியளிப்பில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் தொடர்புடைய பலர் கைது செய்யப்பட்டு மத்திய வங்கியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இவ்விடயங்கள் சர்வதேச ஊடகங்களிலும் விரிவாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சில வெளிநாடுகளில் அந்நாடுகளின் சட்ட அமுலாக்கப் பிரிவினர் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அலுவலகங்களில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

வெளிநாடுகளில் உள்ள கிளைகளிலிருந்து வங்கி அமைப்பின் ஊடாக பெருந்தொகையிலான பணத்தை மனிதாபிமானக் கருத் திட்டங்களின் தேவைக்கென இலங்கையில்உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பெற்றுள்ளதோடு தொடர்ந்தும் பெற்று வருகிறது.

இப் புலனாய்வுகள் முடிபுக்கு வரும்வரை சம்பந்தப்பட்ட சட்டம் மற்றும் ஒப்பந்தத்தின் விதிகளுக்கு அமைய தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வங்கிக் கணக்குகளின் ஊடாக நடைபெறும் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களை இடைநிறுத்தி வைக்கவும் அத்தகை கணக்குகளில் இருக்கும் நிதிகளை முடக்கி வைக்கவும் மத்திய வங்கி தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# ஐக்கிய தேசியக் கட்சி விரைவில் அரசு அமைக்கும்

## அதன் தலைவர் ரணில் தெரிவிப்பு

இலங்கையில் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அமைக்கும் என்று அக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்வில் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அரசியல் எதிரிகளாலும் பயங்கரவாதிகளாலும் ஐக்கிய தேசியக் கட்சி பாரிய இழப்புக்களைச் சந்தித்துள்ளது.

பிரேமதாச, காமினி திஸநாயக்க மற்றும் வடக்குக் கிழக்கின் உள்ளூராட்சி அரசாங்க உறுப்பினர்கள் பலர் 1981 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டு வரை கொல்லப்பட்டுள்ளனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளால் பெருந்தொகையான வாக்குகள் ஐக்கிய தேசியக் கட் சிக்குக் கிடைக்காமல் போய்விட்டது.

1988 மற்றும் 1989 ஆண்டுகளில் ஜே.வி.பியினரால் கசப்பான அனுபவங்களுக்கு ஐக்கிய தேசியக்கட்சி முகம் கொடுக்க நேரிட்டது. அக்கால கட்டத்தில் 6 ஆயிரத்திற்கும் அதிகமான கட்சித்தொண்டர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

ஜனநாயகமற்ற வழியில் அப்போதைய அரசாங்கம் செல்ல முயற்சித்த நிலையில் ஜே.ஆர்.ஜயவர்த்தன தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார். கட்சிக்காகத் தியாகம் செய்தோர் எண்ணற்றோர் கனவு நிறைவேறும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியானது விரைவில் அரசாங்கத்தை அமைக்கும் என்றார் ரணில் விக்கிரமசிங்க.(ச)

# எந்தக்கட்சி அரசுடன் இணைந்தாலும் ஹெலஉறுமய அலட்டிக் கொள்ளாது

## அதன் பாராளுமன்றக் குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துடன் இணைவதில் எமக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் எதற்காக இணைகிறது? எவ்வாறு இணைந்து செயற்படப் போகின்றது?என்பதை ஆராயப்பட வேண்டிய விடயங்களாகும் என்று ஜாதிக ஹெலஉறுமயவின் பாராளுமன்றக்குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்க வேலைத் திட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். தேரர் மேலும் கூறியதாவது;

ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதியின் அழைப்பை எந்த விதத்தில் நோக்கினாலும் நாங்கள் அலட்டிக் கொள்ள மாட்டோம்.அரசாங்கத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்து செயற்படுவது தொடர்பாக நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டோம். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி ஏன் அரசாங்கத்துடன் இணைகிறது என்கிறது தொடர்பாக நாங்கள் சிந்திக்க வேண்டியுள்ளது.

தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் அரசாங்கத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி இணையுமானால் அது எவ்வாறு சாத்தியமாகும் என்று ஆராய வேண்டும்.

இரு கட்சிகளாலும் இணைந்து தேசிய பிரச்சினையைத் தீர்க்க முடியுமா? என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

இதேவேளை ரணில் இந்தியா சென்றுள்ளமையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லண்டன் சென்றமை தொடர்பாகவும் எம்மால் ஊகிக்க முடியாதுள்ளது என்றார் அவர். (ச-5)

# விதிமுறையை மீறிய பேக்கரிக்கு பாண் தயாரிக்க தடைவிதிப்பு

## உடுவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலரின் முறைப்பாட்டிற்கு அமைவாக அப் பிரதேச செயலகப் பிரிவில் இயங்கிய பேக்கரி ஒன்றின் பாண் உற்பத்தி தடைசெய்யப்பட்டுள்ளதாக யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் எ.சிவசுவாமி தெரிவித்தார்.

அரசாங்க அதிபரின் நிபந்தனைகளுக்கு முரணான முறையில் பாண் உற்பத்தி செய்து விற்பனை செய்தமையினாலேயே இந்த உத்தரவு இடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் நேற்று பல்வேறுபட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் இயங்கும் பேக்கரிகளுக்கு சென்று மேற்பார்வை செய்ததுடன் விற்பனை நிலையங்களுக்குச் சென்று விசாரணைகளையும் மேற்கொண்டார்.

வழங்கப்பட்ட மாவில் தரமான மட்டுப்படுத்தப்பட்ட விலையில் சரியான நிறையுடன் தயாரித்து அனைவரும் நுகரக் கூடிய வகையில் விற்பனை செய்யவேண்டும். அவ்வாறு அல்லாது அரசாங்க அதிபரின் அறிவித்தலுக்கு முரணாக செயற்படுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்களின் குற்றச்சாட்டுக்களின் பேரில் நீதிமன்ற விசாரணைக்கும் கொண்டு செல்லப்படும் எனவும் மேலதிக அரசாங்க அதிபர் எ.சிவசுவாமி பேக்கரி உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளார். (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தலைமையிலான அரசுடன் ஜே.வி.பி.இணையும் சாத்தியமில்லை

## விரைவில் பாராளுமன்றத் தேர்தல்?

(கொழும்பு)

**ஜே.வி.பி.ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துடன் இணையும் சாத்தியம் இல்லை என்ற நிலைமையேற்பட்டுள்ளது. ஜே.வி.பியின் முக்கிய சில யோசனைகளுக்கு சுதந்திரக் கட்சி இணக்கம் தெரிவிக்கவில்லை. இதன் அடிப்படையில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் வாய்ப்பு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.**

**இந் நிலையில் பாராளுமன்றத் தேர்தல் ஒன்றை எதிர்பார்ப்பதாக தென்னிலங்கை அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.**

இது குறித்து ஜே.வி.பியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்ததாவது,

ஜே.வி.பி.அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் சாத்தியம் வெகுவாக குறைந்து விட்டது. நாங்கள் சுதந்திரக்கட்சிக்கு சமர்ப்பித்துள்ள 20 யோசனைகளில் முக்கிய சில விடயங்களில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென்று சுதந்திரக்கட்சி கூறியது.

முக்கியமாக போர்நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்தல்;நோர்வேயை வெளியேற்றுதல் மற்றும் அமைச்சரவை அமைச்சர்களை 30 ஆகக் குறைத்தல் போன்ற விடயங்களில் சுதந்திரக்கட்சி திருத்தங்களை முன்வைத்தது.

ஆனால் அந்தத் திருத்தங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறி நாங்கள் மீண்டும் பதில் ஒன்றை அனுப்பினோம். அதற்கு இதுவரை சுதந்திரக்கட்சியிடம் இருந்து பதில் கிடைக்கவில்லை.

இந் நிலையில் சுதந்திரக்கட்சியிடம் இருந்து இனியும் பதிலை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. எனவே அரசாங்கத்துடன் இணைவதற்கான எதிர்பார்ப்புக்களை கைவிடவேண்டிய வரும் என்று எண்ணுகின்றோம்.

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்துடன் இணைவதானது நடைபெறாத ஒரு விடயமாகவே இருக்கிறது என அவர் கூறினார்.

இதேவேளை விரைவில் பாராளுமன்றத் தேர்தல் ஒன்றை எதிர்பார்ப்பதாக தென்னிலங்கை அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தொங்கு நிலையில் இயங்கும் அரசாங்கத்துடன் ஜே.வி.பி.இணைய மறுக்கும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி புதிய பாராளுமன்றத் தேர்தலுக்கு உத்தரவிடலாம் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-5)

## புலிகளின் பலத்தை ஒழிக்கவே சம்பூர் மீதான தாக்குதல் !

### அரச சமாதான செயலகம் தெரிவிப்பு

இராணுவ -பொருளாதாரத்தை நிலைகுலைய வைக்கும் பலம் சம்பூரில் விடுதலைப்புலிகளுக்கு இருந்தமையால் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வட பகுதியில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளுக்கு இன்றியமையாத ஆதரவை திருகோணமலையில் அமைந்துள்ள கடற்படை மற்றும் அதற்கு அருகில் உள்ள விமானப்படைத்தளம் ஆகியவை வழங்குகின்றன.

2006 ஓகஸ்ட் முதலாம் நாள் சம்பூரில் இருந்து பல முறை பீரங்கி வேட்டுக்களை தீர்ப்பதன் மூலம் கடற்படை தளத்தில் உள்ள கட்டடங்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் சேதம் விளைவித்ததோடு திருகோணமலையில் உள்ள கடற்படைத் தளத்தை தாக்குவதற்கான பலம் தமக்கு இருப்பதையும் தெளிவாக நிரூபித்துக்காட்டினர் என அரச சமாதான செயலகம் தெரிவித்துள்ளது.

ஓகஸ்ட் 12 ஆம் நாள் திருகோணமலைத் துறை முகத்திற்கு அருகே சீனன்குடாவில் உள்ள விமானப்படைத்தளத்தை நோக்கியும் விடுதலைப்புலிகள் பீரங்கிக்குண்டுகளை ஏவினர்.

சம்பூரில் இருந்து நீண்ட தொலை செல்லக் கூடிய ஆயுதங்களைப் பிரயோகித்து பாதுகாப்புப்படையினருக்கு பொருட்களை எடுத்துச்செல்லும் திருகோணமலைத்துறை முகப் பகுதியில் உள்ள முக்கிய வழிகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய விடுதலைப் புலிகளின்திறன் இத் தாக்குதல்கள் மூலம் தெளிவாகியது.

இதனால் இலங்கையின் நன்மை கருதி சம்பூரில் நிலை கொண்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் தூர இலக்குகளை தாக்கக்கூடிய ஆயுதங்களை செயலிழக்கச் செய்வதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளத்தேவைப்படுகிறது.

சம்பூரில் இருந்து திருகோணமலைத் துறை முகத்திற்கான அச்சுறுத்தலை நீக்குவதற்கு வேறு வழியில்லை என்ற நிலையில் இது தொடர்பாக தெளிவானதோர் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று அரச சமாதான செயலக இணையத் தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## பாராளுமன்றத்தில் நேற்று பிரதிக்குழுத் தலைவர் தெரிவு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினராக பியசிறி விஜயநாயக்க தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இத் தெரிவில் காணப்பட்ட சிக்கலையடுத்து நேற்று பாராளுமன்றம் மூன்று முறை ஒத்திவைக்கப்பட்டது.மூன்றாவது முறை ஒத்தி வைக்கப்பட்டமையடுத்து கட்சித்தலைவர்களின் கூட்டம் இடம் பெற்றது.

இதனையடுத்து வாக்கெடுப்பு மூலம் பியசிறி விஜயநாயக்க தெரிவுசெய்யப்பட்டார்.(ச)


## Patrician Institutes
VACANCY

### POST OF COMPUTER INSTRUCTOR

மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகுதியானவர்கள் உரிய ஆவணங்களுடன் 09.09.2006 திகதிக்கு முன் நேரில் சமுகம் தரவும்.

NOTE:-எமது நிறுவனத்தின் சகல பயிற்சி நெறிகளும் ஆரம்பமாகி உள்ளதால் உடன் மாணவர்கள், ஆசிரியர்களை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு,

பதிவாளர்,

PATRICIAN INSTITUTES
59,St.PATRICK'S ROAD,
JAFFNA
T.P.No.021 222 6148

(C- அ-492)


### அச்செழுவில்...

கொண்டு செல்லப்பட்டதாக இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன. இதனையடுத்து அப் பகுதியில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச)

### நோர்வேயின்...

தமிழ் மக்கள் சமூக பொருளாதார கலாசார மற்றும் அரசியல் ரீதியாக எழுச்சி பெற தேவையான பின்னணியை கட்டியெழுப்புவது அனைவரது கடமை என்றும் விமல் வீரவன்ஸ தெரிவித்தார். (ச)

### யாழில்...

தலைவர் பிரபாகரனுக்கு யாழ்.ஆயர் அனுப்பி வைத்துள்ள கடிதம் வருமாறு,

யாழ்.அரச அதிபர் அறிக்கையின்படி கையிருப்பில் உள்ள உணவுப்பொருட்கள் இன்னும் ஐந்தே நாட்களில் முடிபடைந்து விடும்.இப்போது கொழும்புத்துறை முகத்தில் யாழ்.மக்களுக்கென உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டிருக்கும் கப்பல் ஓரிரு நாட்களில் புறப்படாவிடில் யாழ். மக்கள் பட்டினிச்சாவை சந்திக்க நேரிடும் அபாயம் ஏற்பட் டுள்ளது.ஆவணி மாதம் 11 ஆம் திகதியில் இருந்து தொழில் துறை இல்லா மல் ஏற்கனவே துன் பத்தை அனுபவிக்கும் மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்குவது கொடூரமானது.

எனவே ஓரிரு கப்பல்களையாவது தடையின்றி யாழ்.வந்தடைய அனுமதிக்கும்படி தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடத்தை மனிதாபிமான ரீதியில் அன்பாக வேண்டுகின்றோம்.தமிழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டு இந்த அவசர வேண்டுகோளை உடன்நிறைவேற்றுவீர்களென அன்புடன் எதிர் பார்க்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அரசிற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள்

அரசாங்கத்திற்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த உள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது. மக்களின் வாழ்க்கை செலவு பாரிய அளவில் அதிகரித்துள்ளதாகவும் அந்த கட்சியின் பிரதி பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

மின்சாரக் கட்டணங்கள், எரிபொருட்கள் போன்றவற்றின் விலைகள் அதிகரித்துள்ளதால் மக்களின் வாழ்க்கைச் செலவு மேலும் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்ட அவர் அவற்றைய வலியுறுத்தி பாரிய ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளப் போவதாகக் கூறினார்.

அரசாங்கம் மக்களின் வாழ்க்கைச் செலவுப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணாது போனால் நாடு முழுவதிலும் பாரிய எதிர்ப்பு ஆர்பாட்டங்களை மேற்கொள்ள வேண்டி ஏற்படும் என அவர் எச்சரித்தார். இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டு விழா இன்று கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முற்பகல் 10 மணிக்கு சிறீ கோத்தாவில் நடைபெறவுள்ளதாக அவர் கூறினார். (ச-5)

### சமாதானப் பேச்சுக்குத்...

பின்னர் தமிழீழ விடுத லைப்புலிகளின் சமாதான செயலகப் பணிபாளர் புலித்தே வன், சமாதான பேச்சுக்களுக்கு தயாராக இருப்பதாக தெரிவித்திருப் பது வரவேற்கத்தக்கது என அவர் தெரிவித் தார்.

அரசாங்கம் யுத்தத்தை முன்னெடுக்க வில்லை திருகோணமலையின் முக்கிய இடங்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலாக இருந்த இடங்களுக்கே படை நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந் நிலையில் அரசாங்கமும் சமாதான பேச்சுக்குத் தயார் என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

சம்பூரில் விடுதலைப்புலிகளால் புதைக் கப்பட்ட மிதிவெடிகளை அகற்றியவாறு இரா ணுவத்தின் நடவடிக்கை தொடர்வதாக அவர் மேலும் கூறினார். (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org